1981 மார்ச் 4] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

செய்திருக்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னையை இனி நீட்டிக் கொண்டு போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** நடந்தது எதையும் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம்.

[முற்பகல் 10–20]

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) திரு. அ. ரகுமான்கான் மீது— தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் அவர்கள் 4—2—1981 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். திரு. ரகுமான்கான் அவர்கள் வேண்டுமென்றே தவறு என்று தெரிந்திருந்தும், பேரவையைத் திசை திருப்பும் எண்ணத்துடன் சில தவறான தகவல்களைப் பேரவைக்கு அளித்தார் என்பது தான் டாக்டர் சமரசம் அவர்களின் குற்றச்சாட்டு. இதற்குத் திரு ரகுமான்கான் அவர்கள் விளக்கம் அளித்தார். எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று கூறியிருந்தேன். எனது தீர்ப்பு.

1981-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் நாள் அன்று திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தவறான தகவல்களை அவைக்குக் கூறியதாகக் குற்றம் சாட்டினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளித்தார். இதற்குப் பிறகும், திரு ரகுமான்கான் தன் குற்றச்சாட்டை வலியுறுத்திப் பேசியுள்ளார் என்பது டாக்டர் சமரசம் அவர்கள் கருத்து.

திரு ரகுமான்கான் முதலில் குற்றச்சாட்டுக்களைக் கூறிய போதும் சரி, பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குற்றம் சாட்டிப் பேசியபோதும் சரி தகுந்த முழு ஆதாரங்களைத் தன்னிடம் வைத்திருக்கவில்லை. அவர் தன்னிடம் இருந்த ஆதாரங்களைக் கொண்டு குற்றச்சாட்டுகளைக் கூறினார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர்கள் தங்களிடமுள்ள ஆதாரங்களைப் பேரவைத் தலைவருக்கு முன்னதாகக் காட்டி, குற்றம் சாட்டப்படும் உறுப்பினர் அல்லது அமைச்சருக்கு முன் தகவல் அளித்தபின்தான் குற்றச்சாட்டுக்களைப் பேரவையில் எழுப்பலாம் என்று இதற்குமுன் ஒரு தீர்ப்பில் நான் கூறியுள்ளேன். எனவே, தகுந்த ஆதாரம் இன்றிக் குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று கொள்ளலாமேயொழிய வேறுவிதமான ஆதாரங்கள் இருந்தும், வேண்டுமென்றே அவற்றை மறைத்து, மாண்புமிகு அமைச்சர் மீது குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று கொள்வதற்கில்லை. நான் மேலே குறிப்பிட்டுள்ளதுபோல ஆதாரங்களை முன்னதாகக் காட்டிவிட்டு முன் தகவல் அளித்து விட்டுக் குற்றச்சாட்டுக்களை எழுப்பும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி, இதை எல்லா உறுப்பினர்களும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுப்பப்பட்ட பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்து தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7 ஆம் நாள் அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையைப் பேரவையில் எழுப்பினார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தபின், எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தேன். எனது தீர்ப்பு:

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு வெளியே ஒரு கூட்டத்தில் பேசிய ஒரு பேச்சு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பொறுப்பை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது என்றும், மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதவியைப் பயன்படுத்தித் தனது நேர்முக உதவியாளர் மூலம் அப்பேச்சின் சுருக்கமாக வெளியிட்டுள்ள அறிக்கை சட்டமன்றத்தைத் தாழ்வுபடுத்துவதாக உள்ளது என்றும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமது பேச்சின் சுருக்கத்தை வெளியிட்ட தமது நேர்முக உதவியாளர் அரசு சம்பளம் பெறும் அரசு அலுவலர் அல்ல என்றும், மேலும் அரசு முத்திரையுடனோ, அரசு வெளியீடாகவோ அது வெளியிடப்படவில்லை என்றும், தனிப்பட்ட முறையில் ஒரு அரசியல் கூட்டத்தில் தாம் பேசிய பேச்சு அது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து, இதில் அரசு முத்திரையுடன் வெளியிடப்படவில்லை என்பதாலும்,